

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.

## ‘ஒன் டூ ஒன்’ சந்திக்கும் “உடன்பிறப்பே வா” நிகழ்வில்

# முதல்வர் மு.க. ஸ்டாலின் - 80வது தொகுதியாக ஓசூர் நிர்வாகிகளுடன் சந்திப்பு!

சென்னை, நவ.10 -

சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக பகுதிநகரஒன்றிய பேரூர் கழகச் செயலாளர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் சந்திக்கும் நிகழ்வு 13.6.2025 அன்று தொடங்கப்பட்டது.

மக்களின் கோரிக்கைகளைக் கேட்பது போல, கழகத்தினரின் மனக்குரலை அறிந்துகொள்வதற்காகத்தான் அறிவாலயத்தில், ‘உடன்பிறப்பே வா’ எனும் தொகுதிவாரியான நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டம் நடைப்பெற்று வருகிறது என கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த ஜூன் 1, 2025 அன்று மதுரையில் நடைப்பெற்ற கழகப் பொதுக்குழுவில் இந்தச் சந்திப்பு குறித்து கழகத் தலைவர் அவர்கள் உரையாற்றும்போது அறிவித்து, அதன்படியே, கழக நிர்வாகிகள் ‘ஒன் டூ ஒன்’ ஆக தலைவர் அவர்களை சந்தித்து தங்கள் மனதில் உள்ளதை தெரிவித்து வருகிறார்கள். கழகத் தலைவர் அவர்கள், கழக நிர்வாகிகளிடம் அந்தந்த சட்டமன்றத் தொகுதிகளில் கழக ஆட்சியின் மீது ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் ஆகியோரது ஆதரவு நிலை குறித்தும், மக்களின் எதிர்பார்ப்புகள் குறித்தும் கேட்டறிந்தார். மேலும், மாணவ மாணவிகள், பெண்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் என அனைத்துத் தரப்பினருக்கும் அரசு செயல்படுத்தி வரும் சிறப்பான திட்டங்களையும், சாதனைகளையும் அவர்களிடம் எடுத்துச் சொல்லி திராவிட மாடல் அரசின் செயல்பாடுகளை விளக்க வேண்டும் எனவும் அறிவுரைகள் வழங்கினார்கள்கள்.

இச்சந்திப்பின்போது, முன்வைக்கப்படும் கோரிக்கைகள் பெரும்பாலானவற்றுக்கு உடனடியாக அமைச்சர்களிடம் பேசித் தீர்வு காணப்படுவதோடு, மண்டல பொறுப்பாளர்கள் அனைத்து பிரச்சனைகளையும் கண்காணித்து அறிக்கை தர வேண்டும் என்று கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இத்தகைய சிறப்புமிக்க “உடன்பிறப்பே வா” நிகழ்வின் 80வது தொகுதியாக நேற்றைய தினம் (8.11.2025) ஒசூர் நிர்வாகிகளை கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் சந்தித்து பேசினார். “உடன்பிறப்பே வா” நிகழ்வின் மூலம் இதுவரை 2,000க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகளை கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சந்தித்து பேசியுள்ளது குறிப்பிடத்தக்கது.

நேற்று ராஜபாளையத்தில் கட்டி முடிக்கப்பட்ட மருத்துவமனை திறக்க வேண்டும் என்று கழக நிர்வாகிகள் தெரிவித்த போது, முதலமைச்சர் அவர்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களை அறிவாலயத்திற்கு அழைத்து அம்மருத்துவமனையை உடனடியாக திறக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். தாமதப்படுத்தும் அலுவலர்களிடம் விளக்கம் கேட்கவும் அறிவுறுத்தினார்.

“உடன்பிறப்பே வா” நிகழ்வின் மூலம் தங்கள் தொகுதிகளுக்குட்பட்ட பிரச்சனைகள் குறித்து கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களிடம் நேரடியாக தெரிவித்து, தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படுவதால் கழக நிர்வாகிகளும், பொதுமக்களும் தங்கள் பகுதிக்கான “உடன்பிறப்பே வா” நிகழ்வு எப்போது நடக்கும் என்று ஆவலாக உள்ளனர்.

## 21,848 நபர்களுக்கு பல்வேறு பரிசோதனைகள் செய்யப்பட்டு உரிய ஆலோசனைகள்!

# நாழிக்கல்பட்டியில் “நலம் காக்கும் ஸ்டாலின்” மாபெரும் மருத்துவ முகாம்!

## இரா.இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

சேலம், நவ. 9-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டாரம், நாழிக்கல்பட்டி அரசினர் மேல்நிலைப்பள்ளியில் நேற்று (08.11.2025) நடைபெற்று வரும் “நலம் காக்கும் ஸ்டாலின்” மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வுக்குப் பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் சென்னையில் இருந்து காணொலி காட்சியின் வாயிலாக “நலம் காக்கும் ஸ்டாலின்” மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை 02.08.2025 அன்று தொடங்கி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து அன்றையதினம் சேலம் மாநகராட்சி, மணக்காடு, காமராஜர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் “நலம் காக்கும் ஸ்டாலின்” மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமானது தொடங்கி வைக்கப் பட்டது.

குறிப்பாக சேலம் மாவட்டத்தில் இதுவரை நடத்தப்பட்ட 14 மருத்துவ முகாம்களில் 9,436 ஆண்களும், 12,412 பெண்களும் என மொத்தம் 21,848 பயனாளிகள் கலந்துகொண்டு பயன் பெற்று உள்ளனர். இதில் 17,227 நபர்களுக்கு இரத்தப் பரிசோதனையும், 15,042 நபர்களுக்கு இ.சி.ஜி. பரிசோதனையும், 2,166 நபர்களுக்கு அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் பரிசோதனை, 2,318 நபர்களுக்கு எக்கோ பரிசோதனையும் மற்றும் 1,769 நபர்களுக்கு எக்ஸ்ரே பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டு உரிய ஆலோசனைகள் வழங்கப் பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக நேற்றையதினம் (08.11.2205) இச்சிறப்பு மருத்துவ முகாமானது பனமரத்துப்பட்டி வட்டாரம், நாழிக்கல்பட்டி அரசினர் மேல்நிலைப்பள்ளியில் நடத்தப்படுகிறது. நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் இரத்த பரிசோதனை, இ.சி.ஜி. உள்ளிட்ட பரிசோதனைகள் அனைத்தும் இலவசமாக செய்யப்படுகிறது.

மேலும், இம்மருத்துவ முகாமில் பொது மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பு மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம் மற்றும் மகப்பேறு மருத்துவம் உட்பட 17 வகையான சிறப்பு மருத்துவ துறைகள் சார்ந்த சிறப்பு மருத்துவ நிபுணர்கள் கொண்டு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

முன்னதாக, சிறப்பு மருத்துவ முகாமில் கலந்து கொண்ட 48 மாற்றுத்திறனாளிகளுக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைகள் மற்றும் 2 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.16,500 மதிப்பிலான சக்கர நாற்காலிகளும், 2 நபர்களுக்கு ரூ.6,750 மதிப்பிலான காதொலிக்கருவிகளும் என மொத்தம் ரூ.39,750 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, இணை இயக்குநர் நலப்பணிகள் மரு.நந்தினி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.யோகானந்த் (ஆத்தூர்), மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி செண்பகவள்ளி, முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர் பாரப்பட்டி சுரேஷ்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## உடன்குடி கிழக்கு ஒன்றியச் செயலாளர்

# க.இளங்கோ மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 10 -

உடன்குடி கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் க.இளங்கோ அவர்கள் மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து, அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தி வருமாறு:-

தூத்துக்குடி தெற்கு மாவட்டம் - உடன்குடி கிழக்கு ஒன்றியச் செயலாளர் க.இளங்கோ அவர்கள், நேற்று மாரடைப்பு ஏற்பட்டு இயற்கை எய்தினார் எனும் செய்தி அறிந்து பெரிதும் வருந்துகிறேன்.

அவரது மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், கழக முன்னோடிகள், உடன்பிறப்புகள் அனைவருக்கும் எனது ஆறுதலையும் - அவரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் அவர்கள், அந்த இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் ஒன்றியம், மேட்டுப்பாளையம் ஊராட்சி, மோளக்கவுண்டன் வலசில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 1,17,22,000/ மதிப்பீட்டில் முத்தூர் சாலை முதல் மோளக்கவுண்டன் வலசு வரை தார் சாலை பலப்படுத்தும் பணியினை அமைச்சர், மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். இதில் மாவட்ட துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், ஒன்றிய கழக செயலாளர், நாட்டராயன் கோவில் அறங்காவலர் குழுத்தலைவர் எஸ்.சந்திரசேகர், முத்தூர் பேரூர் கழக செயலாளர் செண்பகம் பாலு உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கழக துணைப் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட இல.பத்மநாபன் ஆகியோர் தாராபுரத்தில் உள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், நகர கழக செயலாளர் எஸ்.முருகானந்தம், மாவட்ட துணை செயலாளர்கள் ராசி கே.ஆர்.முத்துக்குமார், பிரபாவதி பெரியசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், நகர்மன்ற தலைவர் கு.பாப்பு கண்ணன் உள்பட ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# ஆண்டுதோறும் அறிவுத் திருவிழாவை நடத்த வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை...! முதல் பக்கத் தொடர்ச்சி

திராவிட இயக்க இதழ்களை ஒரு தி.மு.க. காரர் வாசிக்க, அவரைச் சுற்றி பத்து பேர் செவிவழியாகக் கேட்டு உலக வரலாற்றைத் தெரிந்து கொண்டார்கள். கிராமத்தில் இருக்கிறவர்களும் கியூபா புரட்சியைத் தெரிந்து வைத்திருந்தார்கள். ரஷ்யப் புரட்சியைப் பற்றி படித்து, ஊக்கமும் உறுதியும் பெற்றார்கள். இவ்வாறு நாம் பெற்ற வெற்றி என்பது இனி யாரும் படைக்க முடியாத வரலாற்றுச் சாதனை!

**பகல் கனவு காணும் அறிவிலிகள்!**

இந்த வரலாறு பற்றியெல்லாம் தெரியாத சிலர், நம்மை மிரட்டிப் பார்க்கிறார்கள்! இன்னும் சில அறிவிலிகள் தி.மு.க.வைப் போலவே வெற்றி பெறுவோம் என்று பகல் கனவு காண்கிறார்கள். தி.மு.க.வைப் போன்று வெற்றி பெற, தி.மு.க.வைப் போன்று உழைப்பும், அறிவும் தேவை! ஒரு சூரியன்! ஒரு சந்திரன்! ஒரு தி.மு.க.தான்! இனி இப்படியொரு இயக்கம் இந்த மண்ணில் தோன்ற முடியாது!

இந்த வரலாற்றையும் நம்முடைய கொள்கைகளையும் தம்பி உதயநிதி இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்த்ததால்தான், இளைஞரணிச் செயலாளராக அவர் பொறுப்பேற்றதில் இருந்து, லட்சக்கணக்கான இளைஞர்களை கழகத்துக்குள் கொண்டு வந்திருக்கிறார்! அவர்களுக்குப் பாசறைக் கூட்டங்களை நடத்தியிருக்கிறார்!

# இந்தியாவே போற்றும் தி.மு.க.!

**உதயநிதியின் தொண்டு கண்டு - முதன்மைத் தொண்டன் என்ற முறையில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்!**

முரசொலியின் கடைசிப் பக்கத்தை பாசறைப் பக்கமாக மாற்றினார்! கொள்கைகளைப் பரப்ப முத்தமிழறிஞர் பதிப்பகத்தைத் தொடங்கினார்! தொகுதி தோறும் கலைஞர் நூலகங்களைத் திறக்கிறார்! உங்களைப் போன்ற இளம் பேச்சாளர்களை உருவாக்குகிறார்! இப்போது, இந்த அறிவுத் திருவிழா மூலமாக, இளம் எழுத்தாளர்கள் - ஆராய்ச்சியாளர்கள் என்று உருவாக்கிக் கொண்டு இருக்கிறார்! இதுதான், தந்தை பெரியார் செய்த பணி! பேரறிஞர் அண்ணா செய்த பணி! தலைவர் கலைஞர் செய்த பணி! நான் விரும்பும் பணி! இதை உதயநிதி செய்வதால், தந்தை என்பதைவிட, இந்த இயக்கத்தின் முதன்மைத் தொண்டன் என்ற வகையில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்!

**மாபெரும் அறிவுக் கருவூலம்! கொள்கைத் தீரர்களின் கோட்டம்!**

இன்றைக்கு வெளியிடப்பட்டிருக்கும், “காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு” புத்தகத் தலைப்பிலேயே, நம்முடைய இயக்கம் எத்தகைய மாபெரும் அறிவுக் கரூவூலமாக கொள்கைத் தீரர்களின் கோட்டமாக இருக்கிறது என்று வெளிப்படுத்தியிருக்கிறார்கள்!

நம்முடைய 75 ஆண்டுகால வரலாற்றையும் சாதனைகளையும், 1,120 பக்கங்களில் தம்பி உதயநிதி உருவாக்கத் துணை நின்ற, ஆலோசனை வழங்கிய நம்முடைய மதிப்பிற்குரிய சிந்தனைக் கருவூலம் அய்யா க.திருநாவுக்கரசு அவர்கள், ஊடகவியலாளர்கள் திருமாவேலன் அவர்கள், விஜயசங்கர் அவர்கள், கோவி.லெனின் அவர்கள்... தொகுப்பாசிரியர்கள் செந்தில், சுகுணா திவாகர், நீரை மகேந்திரன், பிரகாஷ், கௌதம ராஜ், பன்னீர் பெருமாள் என எல்லோரையும் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

**அனைவரும் கண்டிப்பாகப் படிக்கவேண்டிய புத்தகம்!**

திராவிட இயக்கத்திற்குச் சார்பானவர்கள் மட்டுமல்ல, திராவிட இயக்கத்திற்கு வெளியில் இருந்து செயல்படுகிறவர்களும், திராவிட இயக்கத்தை விமர்சிப்பவர்களும் கூட கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள். இத்தனை கட்டுரையாளர்கள் பார்வையில், இப்படி ஒரு புத்தகம் உருவாகுவது மிகவும் சிறப்பு! இந்தப் புத்தகத்தை அனைவரும் கண்டிப்பாக படிக்க வேண்டும்!

இந்த நேரத்தில், இளைஞரணியினருக்கு நான் ஒரு கோரிக்கை வைக்க விரும்புகிறேன்... இந்தப் புத்தகத்தில் இருக்கும் கட்டுரைகள, காலத்திற்கு ஏற்ற மாதிரி, வீடியோக்களாக மாற்றி, சோஷியல் மீடியாவில் அனைத்து இளைஞர்களுக்கும் கொண்டு சேர்க்க வேண்டும்!

நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அன்னை சோனியா காந்தி முதல் அகில இந்தியத் தலைவர்கள் அனைவரும், தங்கள் பார்வையில் நம்மை அளவிட்டு எழுதியிருக்கிறார்கள்! ஒரு மாநிலக் கட்சியை, அகில இந்தியத் தலைவர்களும், மற்ற மாநிலத் தலைவர்களும் புகழ்ந்து எழுதுவது சாதாரணமாக நடந்துவிடாது!

**ஒடுக்குமுறையில் இருந்து மக்களை மீட்ட இயக்கம்’ என ராகுல் புகழாரம்!**

முக்கியமான தலைவர்கள் நம் இயக்கம் பற்றிச் சொன்ன கருத்துகளில் ஹைலைட்டாக ஒரு வரியை மட்டும் இங்கு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றால், என் மதிப்பிற்குரிய அன்புச் சகோதரர் ராகுல் காந்தி அவர்கள், “ஒடுக்குமுறையில் இருந்து மக்களை மீட்ட இயக்கம்” என்று சொல்லியிருக்கிறார்.

மதிப்பிற்குரிய லாலு பிரசாத் அவர்கள், “சமூகநீதிக்காக 75 ஆண்டுகள் போராடிய இயக்கம்” என்று பாராட்டியிருக்கிறார். மதிப்பிற்குரிய சரத் பவார் அவர்கள், “கூட்டாட்சியின் வலிமையான பாரம்பரியம்” என்று சொல்லியிருக்கிறார்.

**இந்தியாவே போற்றும் இயக்கமாக வளர்ந்திருக்கிறோம்!**

மதிப்பிற்குரிய சி.பி.ஐ. தேசிய செயலாளர் டி.ராஜா அவர்கள், சமத்துவத்தின் முகமாக நம்மை பார்க்கிறார். மதிப்பிற்குரிய பரூக் அப்துல்லா அவர்கள், “மதச்சார்பின்மை மற்றும் ஒற்றுமைக்காகப் பயணிப்பவர்கள்” என்று சொல்லியிருக்கிறார்!

அன்புக்குரிய சகோதரர் அகிலேஷ் அவர்கள், “எங்களுக்கும் தி.மு.க.விற்கும் இருப்பது லட்சியங்களுக்கான உறவு” என்று சொல்லியிருக்கிறார். பீகார் மாநிலத்தின் முதலமைச்சராக விரைவில் வர இருக்கக் கூடிய, நாம் எதிர்பார்த்திருக்கக் கூடிய சகோதரர் தேஜஸ்வி அவர்கள், (கைதட்டல்) நம்மை ஜனநாயகத்தின் தோழனாகப் பார்க்கிறார்.

மரியாதைக்குரிய அரவிந்த் கெஜ்ரிவால் அவர்கள், “அனைவரையும் உள்ளடக்கிய இந்தியாவைக் கட்ட நினைக்கும் இயக்கம்” என்று சொல்கிறார்.

இப்படி, இந்தியாவே போற்றும் இயக்கமாக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்திருக்கிறது! இந்தச் சாதனைகளும் வளர்ச்சியும்தான் பலரின் கண்களை உறுத்துகிறது!

நாம் பேசும், சமூகநீதி - சுயமரியாதை - மாநில சுயாட்சி - கூட்டாட்சி ஆகிய கருத்துகள் இன்றைக்கு இந்தியா முழுமைக்கும் பரவிவிட்டது! “என்னடா இவர்களைத் தமிழ்நாட்டிலேயே முடக்க நினைத்தால், இந்தியா முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்துகிறார்களே” என்று கோபப்படுகிறார்கள்.

**‘திராவிடம் வெல்லும்! அதைக் காலம் சொல்லும்!’ என முழங்கும் திருவிழா!**

எனவே, நான் பெருமையுடன் சொல்கிறேன்... இந்த அறிவுத் திருவிழா, “திராவிடம் வெல்லும்! அதைக் காலம் சொல்லும்!” என்று முழங்கும் திருவிழா!

இங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் புத்தகக் கண்காட்சியில், வெறும் தி.மு.க. புத்தகங்களையும் திராவிட இயக்கப் புத்தகங்களையும் மட்டும் வைக்காமல், பொதுவுடைமை இயக்கப் புத்தகங்கள், அம்பேத்கரியப் புத்தகங்கள் - பெண்ணியப் புத்தகங்கள் என்று அனைத்து வகைப்பட்ட அரசியல் புத்தகங்களுக்கும் களமாக, முற்போக்குப் புத்தகக் கண்காட்சியை ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்!

**தந்தை பெரியார் செய்த பணி இது!**

முற்போக்குக் கருத்துகளை மக்களிடம் அறிமுகப்படுத்தி, அவர்களை எழுச்சி பெற வைப்பது என்ற தந்தை பெரியார் செய்த பணியை நீங்கள் தொடர்ந்து செய்வது பெருமையாக இருக்கிறது!

**கொள்கைகளைக் கூர் தீட்டிக்கொள்ளும் கூட்டம் இது!**

இங்கு இருக்கும் இளைஞரணித் தம்பிமார்களைப் பார்க்கிறபோது, இது கூடிக் கலையும் கூட்டமாக இல்லாமல், காலந்தோறும் கொள்கைகளைக் கூர்தீட்டிக் கொள்ளும் கூட்டமாக இருப்பதால்தான், எத்தனை பெரிய எதிரிகள் வந்தாலும் எத்தனை பெரிய தந்திரங்களைக் கொண்டும் நம்மை வீழ்த்த முடியவில்லை என்று உணர்த்துகிறது! கொள்கைரீதியாகத் தி.மு.க.வை வீழ்த்த முடியாததால், தேர்தல் ஆணையம் மூலமாக, குறுக்கு வழியில் வீழ்த்த முடியுமா என்று முயற்சி செய்கிறார்கள்! அதுதான், S.I.R.

**உண்மையான வாக்காளர்கள் விடுபடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்!**

ஏன் இந்த S.I.Rஐ அவசர அவசரமாக நடத்த வேண்டும்? தேர்தல் நெருக்கத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் இது வேண்டாம் என்று அனைத்து அரசியல் கட்சிகளும் சொல்லியும், ஏன் நடத்த வேண்டும்? இதையெல்லாம் காது கொடுத்து கேட்காமல், தேர்தல் ஆணையம் S.I.R. பணிகளைத் தொடங்கிவிட்டார்கள். இதற்கு எதிராகச் சட்டரீதியாகவும் - அரசியல்ரீதியாகவும் நாம் போராடிக் கொண்டிருக்கிறோம், தொடர்ந்து போராடப் போகிறோம், போராடுவோம், அது வேறு!

இந்த நேரத்தில், இளைஞரணித் தம்பிமார்களிடம் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, களத்தில் வேலை செய்யும் நீங்கள், எந்தவொரு போலி வாக்காளரும் இடம்பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்! உண்மையான நம்முடைய வாக்காளர்கள் விடுபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்! யாருடைய வாக்குரிமையும் பறிபோகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்! அதற்காகக் களப்பணியாற்ற வேண்டும்!

**எந்தக் காவியாலும் - நம்மை எதுவும் செய்துவிட முடியாது!**

நம் இயக்க வரலாறு முழுவதுமே போராட்ட வரலாறுதான்! நம்முடைய போராட்ட வரலாற்றை நினைவூட்டும் கொள்கைத் திருவிழாதான், இந்த அறிவுத் திருவிழா! முற்போக்கு விழாவாக, கருப்பு - சிவப்பு நீலம் - சேர்ந்திருக்கும் போது எந்தக் காவியாலும் நம்மை - எதுவும் செய்ய முடியாது!

இந்தியாவின் ஜனநாயகத்தையும் தமிழ்நாட்டின் எதிர்காலத்தையும் காக்க - 2019 முதல் தொடரும் நம்முடைய பயணம், 2026லும் மாபெரும் வெற்றியைப் பெறும்! “திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையும்!”

தந்தை பெரியாரின், பேரறிஞர் அண்ணாவின், தலைவர் கலைஞரின் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் கொள்கை வாரிசுகள் இருக்கும் வரை, தமிழ்நாடு தலைகுனியாது! தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றி னார்.